பொருளடக்கம்

காதியானிகள் என்பவர்கள் 7

பகுதி 1

மகா பொய்யரின் விகார மரணம் 13

1 இறுதி முடிவு

2 காதியானியை எதிர்த்தால் இறைத்தண்டனை இறங்குமா? 46

3. மரணத்தில் உயிர்பெற்ற உண்மைகள் 49

முதல் கோணம்: நபிக்குரிய பரிசுத்த வாழ்க்கை எதுவும் மிர்சாவிடம் இல்லை 49

இரண்டாவது கோணம்: நபிக்குரிய கண்ணியமான மரணம் மிர்சாவுக்கு இல்லை 54

பகுதி 2

பொய்யர்கள் தோன்றுவது புதிதல்ல 67

1. அஸ்வத் அல்அன்ஸீயின் தலை துண்டிப்பு 69

2. முஸைலமாவின் உடலுக்குள் பாய்ந்து வெளியேறுகிறது ஈட்டி 77

3. துலைஹா அல்அஸ்தீ ஓட்டம் பிடிக்கிறான் 86

பகுதி 3

அஸ்வது அல்அன்சீ, முஸைலமா, துலைஹா வரிசையில் மிர்சா குலாம் 91

1. மிர்சா குலாமுக்கு வந்த முதல் வஹீயும் பென்ஷன் கவலையும் 93

2. மிர்சா இட்டுக்கட்டிய வஹீகளின் இலட்சணம் 101

3. முஹம்மதீ பேகத்தின் திருமணமும்
மிர்சாவின் தில்லுமுல்லுகளும் 145

பகுதி 4

போலி நபிகளின் பொதுவான கொள்கைகள் 207

1. ஒவ்வொரு வழிகேடனும் அல்லாஹ்வுடைய
பண்புகள் குறித்து அவதூறு பேசுகிறான் 209
2. ஒவ்வொரு வழிகேடனும் கஷ்ஃபின் பெயரால்
இட்டுக்கட்டுகிறான் 224
3. தனித்து எவனும் நபி வாதம் செய்வதில்லை
மிர்சாவின் உளறல்கள் குர்ஆனுக்குச் சமமான
வஹீயா? 229

பகுதி 5

முஸ்லிம்களுக்கு முக்கிய அறிவுரைகள் 249

1. காதியானிகள் காஃபிர்களே என்பதில்
சந்தேகப்படக் கூடாது 250
2. மார்க்கத்தை அஸ்ஸலஃப் அஸ்ஸாலிஹ்
வழிமுறைப்படி புரிந்து பின்பற்ற வேண்டும். 253
3. தக்க ஆதாரத்துடன் மார்க்கத்தைக்
கற்றுக்கொள்ள வேண்டும். 257
4. தெளிவான அறிவும் ஆதாரமுமின்றி
காதியானிகளிடம் பேசக் கூடாது 260

காதியானிகள் என்பவர்கள்

காதியானிகளை மிகச் சுருக்கமாக அறிமுகப்படுத்த வேண்டும் என்றால், காதியானிகள் காஃபிர்கள் என்று சொல்லி முடித்துவிடலாம். இதை விட இரத்தினச் சுருக்கமாக அறிமுகப்படுத்த வார்த்தை இல்லை. ஆனால் இது அவர்களின் தோற்றம், வளர்ச்சியைப் பற்றிய விவரத்தைக் கொடுத்துவிடாது என்பதால் சில அடிப்படை யான தகவல்களைக் கொடுத்துவிடுகிறேன்.

- 1835இல் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத் திலுள்ள காதியான் எனும் சிற்றூரில் பிறந்த மிர்சா குலாம் அஹ்மது என்பவர், 1876இல் தனக்கு வஹீ வருவதாகச் சொல்ல ஆரம்பித்தார்.
- 1884இல் தன்னை ஒரு முஜத்தித் (மார்க் கத்திற்குப் புத்துயிர் கொடுக்க வந்தவர்) என்றார்.
- 1889இல் அஹ்மதிய்யா என்ற பெயரில் ஜமாஅத் ஒன்றை நிறுவி, பைஅத் வாங்கத் தொடங்கினார்.
- 1891இல் தானே இமாம் மஹ்தீ, வரவிருக்கும் ஈசா இப்னு மர்யம் என்றெல்லாம் வாதம் செய்தார்.
- 1900இல் தன்னை நபி என்றே பிரகடனப் படுத்தினார்.
- 1908இல் செத்தார்.

இந்தப் பொய்யரை அவர் சொன்னவாறே ஏற்றுக்கொண்டு பின்பற்றுகிற கூட்டம்தான் காதியானிகள்.

1

இறுதி முடிவு

மிர்சா குலாமைக்
கடுமையாக எதிர்த்த ஷெய்க்

மிர்சா குலாம் தன்னை நபியாக அறிவிப்புச் செய்து வருடங்கள் கழிந்திருந்தன. தனக்கு வஹீ வருதாக அல்லாஹ்வின் மீது அபாண்டமான பொய்யை இட்டுக்கட்டியவர்; தான் ஒரு மஹ்தீ, தானே வரவிருக்கும் ஈசா இப்னு மர்யம்; தான் நபியும் ரசூலும் கூட என்று ஏராளமான பொய்களைப் பரப்பிக்கொண்டிருந்தவர்.

இவருக்கு முஸ்லிம் அறிஞர்களிடம் கடும் எதிர்ப்பு கிளம்பியிருந்தது. உண்மையான நபியை நிராகரிப்பது எவ்வளவு பெரிய பாவமோ, அதே அளவுக்கு நபி அல்லாத ஒருவரை நபி என்று நம்பிக்கைகொள்வதும் பெரிய பாவமே. காரணம், இரண்டுமே இஸ்லாமை நிராகரிப்பதுதான்.

தன்னை நபி என்று வாதிப்பவர், இஸ்லாமுக்குப் பெருமை சேர்ப்பதாகக் காட்டிக்கொண்டாலும், அம்மனிதரை நபி என்று நம்புகிறவர்கள் அத்தனை பேரும் இஸ்லாமை நிராகரித்தவர்களே. மிர்சா தன்னை நபியென்று சொன்னதின் மூலம் இஸ்லாமை, தான் நிராகரித்தது மட்டுமின்றி, பாமர முஸ்லிம்களையும் நிராகரிப்பில் தள்ளினார்.

இச்சமயத்தில் இவருடைய பொய் முகத்தைக்

மரணத்தின் மறுபக்கத்தில் பல இருட்டடிப்புகள்

ஆனாலும் காதியானிகள் மிர்சாவின் மரணத்திற்கும் ஷெய்க் ஸனாவுல்லாஹ் அம்ரிஸ்தரி ﷺ விவகாரத்திற்கும் சம்பந்தமில்லை; தாம் விரைவில் மரணிக்கப் போவதைப் பற்றி மிர்சா மூன்று வருடங்கள் முன்பே தம் உயிலில் முன்னறிவிப்புச் செய்திருந்தார். அதன்படியே அது நடந்தது என் பார்கள். அது மட்டுமின்றி, மிர்சாவின் சாபப் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்ள ஸனாவுல்லாஹ் முன்வரவில்லை. ஒப்பந்தமே நடக்கவில்லை எனும்போது, ஸனாவுல்லாஹ்வுக்கு முன்பு மிர்சா மரணித்ததை வைத்து எப்படி உண்மையைக் கண்டறிய முடியும் என்று கேட்பார்கள்.

அவர்கள் எழுதுகிறார்கள்:

... ஹஸரத் அஹ்மத் அவர்கள் "மவ்லவி ஸனாவுல்லாவுடன் ஒரு கடைசி ஒப்பந்தம்" என்றொரு அறிக்கையை வெளியிட்டு மவ்லவி ஸனாவுல்லாஹ்வை முபாஹலாவிற்கு அழைத்தார்கள்.

ஆனால் இந்த அழைப்பை ஏற்காமல் மவ்லவி ஸனாவுல்லாஹ் தமது பத்திரிக்கையில் இவ்வாறெல்லாம் எழுதினார்:

"நீங்கள் எழுதியிருப்பதை ஏற்க எனக்குச் சம்மதமில்லை." (அஹ்லே ஹதீஸ் 26.1907)

"அல்லாஹ் பொய்யர்களுக்கும் கள்வர்களுக்கும் குழப்பவாதிகளுக்கும் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீண்ட ஆயுளை அளிக்கின்றான்."
(அஹ்லே ஹதீஸ் 31.7.1907)

3

மரணத்தில் உயிர்பெற்ற உண்மைகள்

மிர்சா குலாமின் பொய் முகத்தை அவருடைய மரணம் இரண்டு கோணங்களில் அம்பலமாக்கியுள்ளது.

ஒன்று, நபிக்குரிய பரிசுத்த வாழ்க்கை எதுவும் அவரிடம் இருக்கவில்லை என்பதை அவருடைய பிரார்த்தனையால் விளைந்த தண்டனையில் தெரிகிறது.

இன்னொன்று, அவருக்குச் சம்பவித்த மரணம் அல்லாஹ்வின் உண்மை நபிமார்களுக்கு வந்த மரணத்திற்கு முற்றிலும் மாறானது.

இந்த இரண்டு கோணங்களிலும் நிறைய விசயங்கள் இருக்கின்றன.

~ முதல் கோணம்: ~

நபிக்குரிய பரிசுத்த வாழ்க்கை எதுவும் மிர்சாவிடம் இல்லை

மிர்சா தனக்கு மரணத்தை வேண்டி பிரார்த்தித்த வாக்கியங்களைக் கூர்ந்து படியுங்கள். ஷெய்க் ஸனாவுல்லாஹ் அம்ரித்சரி ﵀ தன் மீது சுமத்திய குற்றச்சாட்டுகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கூறி, அது விசயத்தில் தனக்கும் அவருக்கும் இடையே தீர்ப்பளிக்குமாறு வேண்டுகிறார். ஸனாவுல்லாஹ் ﵀ அவர்களின் குற்றச்சாட்டுகள்

1

அஸ்வத் அல்அன்ஸீயின் தலை துண்டிப்பு

அஸ்வத் என்றால் கருப்பு. இவன் கன்னங்கரேல் என்று இருப்பான். இவனுடைய தோல் கருப்பாக இருப்பது மட்டுமல்ல, இவனுடைய தலையையும் முகத்தையும் மறைத்து மூடியிருக்கும் முக்காடும் கருப்பாக இருக்கும். இவனுடைய சாதுரியமான பேச்சும் திடகாத்திரமான தோற்றமும் இவனைப் பிரபலப்படுத்தியிருந்தது. இவன் சூனியக்காரனாகவும் இருந்தான். மக்களைத் தன் பக்கம் ஈர்த்தான். இவனிடம் ஓரளவு செல்வமும் இருந்தது. அதனால் இவனுக்குப் பின் கூட்டம் சேர்ந்தது. சரியாக அல்லாஹ்வின் தூதர் ﷺ தம்முடைய இறுதி ஹஜ்ஜை முடித்துவிட்டு மதீனா வந்து சேர்ந்து நோயுற்ற சமயத்தில் தன்னை நபி என்று பிரகடனப்படுத்தினான் இவன்.

'யமன் தேசத்து ரஹ்மான்', அதாவது யமனுக்கு அருள்பாலிப்பவன் என்று தனக்குத் தானே பெயர் சூட்டிக்கொண்டு பிரசாரத்தில் இறங்கினான். என்றாலும், நபி முஹம்மது ﷺ அவர்களின் நபித்துவத்தை அவன் நிராகரிக்கவில்லை. நபியவர்களை நபியென்றே பேசினான்.

இரண்டு மலக்குகள் தனக்கு வஹீ கொண்டு வருவதாகவும், அவர்களின் பெயர் சஹீக், ஷகீக் என்றும் சொன்னான். தான் நபி என்று பகிரங்கப்படுத்

2

முஸைலமாவின் உடலுக்குள் பாய்ந்து வெளியேறுகிறது ஈட்டி

இவனுடைய பெயர் முஸைலமா இப்னு சுமாமா இப்னு கபீர் இப்னு ஹபீப் அல்ஹனஃபீ. இவன் பனூ ஹனீஃபா கோத்திரத்தைச் சேர்ந்தவன். யமாமாவில் பிறந்து வளர்ந்தவன். இப்பகுதி இன்று அல்ஜுபைலா என்ற நகரமாக, அல் உயைனாவுக்குப் பக்கத்தில் இருக்கிறது. இவனும் தன்னை அர்ரஹ்மான் என்று பெயர் சூட்டிக் கொண்டு, யமாமாவின் அருளாளன் என்று சொல்லிக்கொண்டான். அஸ்வது அல்அன்சீ போல இவனும் சாதுர்யமான பேச்சாளன். மக்களை மயக்கும் தந்திரக்காரன். சூனியக்காரன். இவனுடைய சூனியத்தில் ஒரு பறவையின் இறக்கைகளைத் துண்டித்துவிட்டுத் திரும்பவும் அதைச் சேர்த்துவிட்டதுபோல் காட்டுவான். மக்கள் அதை உண்மையென்று நம்புவார்கள்.

முதன் முதலில் இவன் தன்னை நபி என்று சொன்னபோது நபியவர்கள் மக்காவில் வசித்துக் கொண்டிருந்தார்கள். ஆரம்பத்தில் தனது நபி வாதத்தை இவன் தீவிரப்படுத்தவில்லை. நிறைய மக்களுக்கு இது தெரியாது. நபியவர்கள் மக்காவில் பிரசாரம் செய்துகொண்டிருந்த காலத்தில் அவர்களிடம் தன் ஆட்கள் சிலரை அனுப்பிக் குர்ஆனைக் கேட்டு வருமாறு சொல்வான். அவர்கள் இவனிடம் குர்ஆனின் வசனங்களைக்

1

மிர்சா குலாமுக்கு வந்த முதல் வஹீயும் பென்ஷன் கவலையும்

மிர்சா குலாம் பிறந்தது 1835 பிப்ரவரி 13இல். இந்தியாவின் பஞ்சாப் மாநிலம், குர்தாஸ்பூர் மாவட்டத்தில் காதியான் என்ற கிராமத்தில் பிறந்தார். முதன் முதலில் தனக்கு வஹீ வருவதாக இவர் அறிவித்தது 1876இல்.

நபிமார்கள் பெரும்பாலும் நாற்பது வயதான பிறகே நபியானதால், தனக்கும் முதல் வஹீ அப்படியே வந்தது என்று காட்டிக்கொண்டார். அதுவும் தன்னுடைய தந்தையின் மரணத்தைப் பற்றிய வஹீ என்றார். இதைப் பற்றி காதியானிகளின் எழுத்தில் படித்துவிட்டு பிறகு அலசுவோம். அவர்கள் எழுதுகிறார்கள்:

தந்தையார் உடல் நலமின்றிப் படுத்த படுக்கையானார்கள். அப்போது ஒரு நாள், ஹஸரத் அஹ்மத் அவர்களுக்கு 'அத்தாரிகு வமத்தாரிகு' "இரவின் மீது ஆணையாக, இரவில் வரப்போவது என்னவென்று உமக்குத் தெரியுமா?'' என்ற இல்ஹாம் இறையறிவிப்புக் கிடைத்தது. அச்சமயம் தமது தந்தையார் அன்றிரவில் இறந்துவிடுவார்கள் என்ற எண்ணம் அவர்களின் உள்ளத்தில் தோன்றியது. இந்தச் செய்தியைப் பெற்றதும், அன்னார் மிகுந்த துயரத்திற்கும் வருத்தத்திற்கும் உள்ளானார்கள். இதனைக் குறித்து ஹஸரத்

2

மிர்சா இட்டுக்கட்டிய வஹீகளின் இலட்சணம்

தனக்கு வஹீ வருவதாகச் சொன்ன முஸைலமா, அஸ்வது அல்அன்சீ, துலைஹா போன்றவர் களுக்கும் மிர்சா குலாமுக்கும் நிறைய ஒற்றுமை கள் இருக்கின்றன.

குர்ஆனிலிருந்து காப்பி வஹீ

முதல் ஒற்றுமை, ஏற்கனவே குர்ஆனில் இறங்கி யுள்ள வசனங்கள் சிலதை ஒதிக்காட்டிவிட்டு, தனக்கும் இப்படி வஹீ வந்தது என்றார்கள். முஸைலமா இதைச் செய்தான். மக்காவில் நபியவர் களுக்கு இறங்கியுள்ள வசனங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டு, அதையே தன் மக்களுக்கும் ஓதிக்காட்டிவிட்டு தனக்கு வஹீ வந்தது என்றான். மிர்சா குலாமைப் பாருங்கள். தனக்கு வந்த முதல் வஹீ என்று அவர் சொல்வது, குர்ஆனில் ஏற்கனவே இறங்கியுள்ள சூரா அத்தாரிக்கின் ஆரம்ப வசனங்களில் இருந்து காப்பியடித்தது. இரண்டாவது வஹீ என்பது சூரா அஸ்ஸுமரின் அதே 36வது வசனம். இப்படி எத்தனையோ உதாரணங்களை மிர்சாவின் எழுத்துகளில் காட்ட முடியும். தன்னை நபி, ரசூல் என்று சொல்லிக்கொண்டவர், அதற்கு ஆதாரமாக குர்ஆனுடைய வசனங்களையே தனக்கு வந்த வஹீ என்று வாதிட்டார்.

It is not known to which language these two belong.

These were followed by a revelation. The first sentence is Arabic, then English:

يَادَاوٗدُ عَامِلْ بِالنَّاسِ رِفْقًا وَّاِحْسَانًا

You must do what I told you.

تم کو وہ کرنا چاہیے جو میں نے فرمایا ہے

[Arabic] O Dāwūd [David], behave towards people with kindness and benevolence.

[English] *You must do what I told you.*

[Urdu] You must do what I told you.

The Urdu sentence is also a revealed one. After that there was a revelation in English, but its translation is not revealed….It should be remembered that I am not sure of the sequence; and sometimes revelations are received in different order. The revelations are:

[English] *Though all men should be angry but God is with you. He shall help you. Words of God not can*[163] *exchange.*

After that there were a few more revelations in English of which the following are remembered:

[English] *I shall help you;*

This was followed by:

[English] *You have to go Amritsar;*

[163] This seems to be a scribe's error. The same revelation has been quoted before (*See* page 123) and contains the words can not. [Syed Abdul Hayee]

~ மறுப்பு 6 ~
புரிந்ததைச் சொல்லவில்லை; வஹீ என்றே சொன்னார்

இன்னொரு விஷயம், தனக்கு வந்த வஹீயை, தான் புரிந்துகொண்டவாறு மிர்சா பதிவு செய்தார் என்றும் காதியானிகள் பதில் சொல்வது பச்சை மோசடித்தனம். இதன்படி பார்த்தால், "மிர்சா தனக்கு வந்த வஹீயின் கருத்தை தன்னுடைய சொந்த வார்த்தையில்தான் சொன்னார்; தவறு நேர்ந்தது மிர்சாவின் ஆங்கிலத்தில்தான்" என்ற அர்த்தம் வரும். உண்மையோ வேறு.

வஹீயே தனக்கு ஆங்கிலத்தில்தான் வந்தது என்கிறார் பொய்யர் மிர்சா. அதைத்தான் பதிவு செய்ததாக எழுதுகிறாரே தவிர அதிலிருந்து தான் புரிந்துகொண்ட கருத்தை அல்ல. அதெப்படி அல்லாஹ்வின் வஹீயில் இப்படித் தவறுகள் நேரும் என்பதுதான் இங்கு கேள்வியே தவிர, மிர்சாவின் வார்த்தைகளில் எப்படித் தவறு வரும் என்பதல்ல. பொய்யரைப் பாதுகாக்க தாங்கள் போர்த்தும் போர்வை கிழிந்து கிடப்பதை காதியானிகள் கவனிக்க மறுக்கிறார்கள். அந்தளவு அப்பொய்யரைக் கண்மூடித்தனமாக விசுவாசிக்கிறார்கள்.

~ மறுப்பு 7 ~
தெரியாத மொழியில் வஹீ வராது

மொழி தெரியாத ஒருத்தனிடமிருந்து ஆச்சரிய மூட்டும் வார்த்தைகள் வெளியாகி, அதை அவன் தனக்கு வந்த வஹீ என்று வாதிட்டாலும்,

وَلَقَدْ اٰتَيْنَا دَاوٗدَ وَسُلَيْمٰنَ عِلْمًا ۚ وَقَالَا الْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ فَضَّلَنَا عَلٰى كَثِيْرٍ مِّنْ عِبَادِهِ الْمُؤْمِنِيْنَ ﴿١٥﴾

16. நாம் தாவூதுக்கும் ஸுலைமானுக்கும் ஞானத்தை வழங்கினோம். அவ்விருவரும் (இவ்வாறு) கூறினர்: எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அவனே எங்களுக்கு, நம்பிக்கை கொண்ட தன் அடியார்களுள் பெரும் பாலாரை விட சிறப்பளித்துள்ளான்.

وَوَرِثَ سُلَيْمٰنُ دَاوٗدَ وَقَالَ يٰٓاَيُّهَا النَّاسُ عُلِّمْنَا مَنْطِقَ الطَّيْرِ وَاُوْتِيْنَا مِنْ كُلِّ شَىْءٍ ۖ اِنَّ هٰذَا لَهُوَ الْفَضْلُ الْمُبِيْنُ ﴿١٦﴾

17. மேலும் ஸுலைமான் தாவூதின் வாரிசாக விளங்கினார். அவர், மக்களே! எங்களுக்குப் பறவைகளின் மொழிகற்றுக் கொடுக்கப் பட்டிருக் கிறது[1]. மேலும் (தேவையான) எல்லாப் பொருள்களும் எங்களுக்கு வழங்கப்பட் டுள்ளன. நிச்சயமாக இது (இறைவனது) மிகத் தெளிவான அருளே எனக் கூறி னார்.

وَحُشِرَ لِسُلَيْمٰنَ جُنُوْدُهٗ مِنَ الْجِنِّ وَالْاِنْسِ

18. ஸுலைமானிடத்து ஜின்கள், மனிதர்கள், பறவைகள் ஆகியவற்றி

1

ஒவ்வொரு வழிகேடனும் அல்லாஹ்வுடைய பண்புகள் குறித்து அவதூறு பேசுகிறான்

போலி நபி வாதம் பண்ணுகிறவன் மட்டுமல்ல, எந்த வகையான வழிகேடனுக்கும் முக்கியமான அடையாளம், அவன் அல்லாஹ்வின் பண்புகள் குறித்து என்ன சொல்கிறான் என்பது. அவனுடைய வார்த்தைகள் எப்படியிருக்கின்றன என்பது. அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகளை எப்படி ஈமான் கொள்கிறான் என்பது.

இதிலிருந்துதான் எவனையும் எடைபோடத் தொடங்க வேண்டும். எப்பேர்ப்பட்ட யோக்கியனாக இருந்தாலும், அவன் அல்லாஹ்வுடைய விஷயத்தில் தனக்கு அறிவில்லாததைப் பேசுகிறான் என்றால், குர்ஆனும் நபிவழியும் அல்லாஹ்வைப் பற்றி வருணித்துள்ள உயர்ந்த பண்புகளுக்கு எதிராகப் பேசுகிறான் என்றால், நிச்சயம் அவன் அபாயமானவனே.

மிர்சா குலாம் அல்லாஹ்வின் பெயர் அல்லாத ஒன்றை யாலாஷ் என்று இட்டுக்கட்டியதை முன்பே பார்த்தோம். இது அவனுக்குத் தோழமையாக இருந்த ஷைத்தான் சொல்லிக்கொடுத்த ஷைத்தானின் பெயர்களில் ஒன்றாகத்தான் இருக்க முடியும். அல்லாஹ்வின் மீது இப்படிப் பெயரளவில் இட்டுக்கட்டுவது மட்டுமின்றி,

3

தனித்து எவனும் நபி வாதம் செய்வதில்லை

போலி நபி வாதம் செய்த பொய்யர்களின் வரலாற்றைக் கவனமாகப் பார்த்தால், அவர்கள் அனைவரிடமும் முக்கியமான ஒற்றுமை ஒன்று இருக்கிறது. ஒவ்வொருவனும் தாங்கள் நபி என்ற வாதத்தைக் குர்ஆனையோ, நபிமொழிகளையோ சார்ந்துதான் முன்வைக்கிறான். தனித்து நின்று வாதிப்பதில்லை. பக்கத் துணையாக அவர்கள் பிடித்துக் கொண்டு தொங்குவது நபி ﷺ அவர்களின் நபித்துவத்தின் மீதே. இந்தப் பிடிமானம் இருந்தால், மக்களை ரொம்ப எளிதில் ஏமாற்றி வழி கெடுப்பதோடு, அல்லாஹ்வின் மார்க்கத்திலும் குழப்பத்தை உண்டுபண்ணிவிடலாம் என்று நினைக்கிறார்கள்.

வெளியிலிருந்து இஸ்லாமைத் தாக்குவதை விட, உள்ளே இருந்துகொண்டு "நானொரு நபி. அல்லாஹ் என்னை அனுப்பினான். அல்லாஹ்வும் அவனுடைய நபியவர்களுமே என்னைப் பற்றி முன்னறிவிப்புச் செய்திருக்கிறார்கள்" என்று வாதித்து முற்றிலும் இஸ்லாமுக்கு எதிரான புதிய நம்பிக்கைகளைப் புகுத்திவிடத்திட்டமிடுகிறார்கள். முஸ்லிம்களை அவர்களின் உண்மையான மார்க்கத்திலிருந்து திசை திருப்புவதுதான் நோக்கம் எனும்போது, அதை எப்படிச் செய்தால் என்ன? வெளியிலிருந்து சூழ்ச்சி செய்

1

காதியானிகள் காஃபிர்களே என்பதில் சந்தேகப்படக் கூடாது

முஸ்லிம்கள் நிறைய பேருக்கு காதியானிகளின் நம்பிக்கையும் கொள்கைகளும் தெரியாத காரணத்தால், அவர்களை முஸ்லிம்கள் என்று நம்பி ஏமாறுகிறார்கள்.

“கலிமா சொல்கிறார்களே, தொழுகிறார்களே, நோன்பு வைக்கிறார்களே, அட தொப்பி அணிந்திருக்கிறார்களே என்ற நினைப்பில் அவர்களை எப்படிக் காஃபிர் என்று சொல்வது? சமுதாயத்தில் எத்தனையோ கூட்டங்கள் உள்ளனவே, அவர்களைப் போல் ஒரு கூட்டம்தானே” என்றும் கேட்கிறார்கள்.

இது அறியாமை. ஈமானுடைய அடிப்படைகளையும் தூண்களையும் தெரியாவிட்டால், அகீதாவின் முக்கியத்துவமும் அவற்றில் பொய் கலந்துவிடுவதால் ஏற்படுகிற நாசமும் தெரியாவிட்டால், இப்படித்தான் நினைக்கத் தோன்றும். ஷிர்க், குஃப்ர் பற்றிய சரியான புரிதல் இல்லாவிட்டால் இந்த நிலைதான் ஏற்படும். ஒரு மனிதனுடைய குஃப்ருக்கு (அல்லாஹ்வின் மார்க்கத்தை நிராகரிக்கும் போக்குக்கு) அவன் நபி முஹம்மது ﷺ அவர்களுக்குப் பிறகும் நபிமார்கள் வருவார்கள் என்று நம்புவதைக் காட்டிலும் மோசமான குஃப்ர் எதுவும் இருக்க முடியாது. ஏனென்

3

தக்க ஆதாரத்துடன் மார்க்கத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

அதாவது, பலவீனமான, இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களையும் கண்ணை மூடிக்கொண்டு ஏற்கிற போக்கைக் கைவிட வேண்டும். குர்ஆனிலிருந்தும் ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களிலிருந்துமே தங்கள் மார்க்க ஆதாரங்களை எடுக்க வேண்டும். "இவர் சொன்னார், அவர் சொன்னார்,எங்கள் ஷெய்க் சொன்னார்" என்று ஆதாரம் அறியாமலே மார்க்கத்தைப் பின்பற்றக் கூடாது. இதுவும் வழிகேடுகளின் வாசலைத் திறந்து வைக்கிறது.

காதியானிகள் எத்தனையோ பலவீனமான ஹதீஸ்களைத் தங்களுக்கு ஆதாரமாகக் காட்டுகிறார்கள். முஸ்லிம்களில் யாரெல்லாம் ஹதீஸ்களின் தரங்களைப் பார்க்கத் தேவையில்லை என்று குருட்டாம்போக்கில் தங்கள் மார்க்கத்தைத் தேடுகிறார்களோ, அவர்கள் அனைவரும் அபாயத்தில் இருக்கிறார்கள். இவர்கள் மிகச் சுலபமாக காதியானிகளின் வலையில் விழுவார்கள்.

குர்ஆனையும் நபிவழியையும் விளக்குகிறவர்கள், மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைக்கிறவர்கள் கட்டாயம் இந்த உம்மத்தின் முற்கால, தற்கால ஹதீஸ் துறை அறிஞர்கள் ஒரு ஹதீஸ் குறித்து என்ன அபிப்ராயம் சொல்கிறார்கள் என்